பக்கங்கள் 16 + 5

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 05 சனிக்கிழமை 21.09.2024 | அதிர்வு 51

## அவசியமானால் உடனடியாக ஊரடங்குச் சட்டம் அமுலாகும்

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் அவசியமானால் உடனடியாக நாடு தழுவிய ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் கவனம் செலுத்தியுள்ளனர். 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# ஜனாதிபதித் தேர்தலில் 80 சதவீத வாக்குப் பதிவு

## அஞ்சல் மூல வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் சுதந்திரமாக - அமைதியாக இன்று மாலை 4 மணியுடன் நிறைவடைந்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 04



# பிரதான வேட்பாளர்கள் நால்வரும் தத்தமது பிரதேசங்களில் வாக்களிப்பு





ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்கள் தத்தமது பிரதேசங்களிலுள்ள வாக்களிப்பு நிலையங்களில் வாக்களித்தனர்.

சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு பல்கலைக்கழக வாக்களிப்பு நிலையத்திலும், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ கொழும்பு – 04





உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் -Bonding Tamils Globally

# யாழில் வாக்களிப்பில் மக்கள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பில் யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் ஈடுபட்டபோது...
(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)













# வாக்காளர்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்திய வாக்களிப்பு நிலையம்

(க.கிஷாந்தன்)

நுவரெலியா – மஸ்கலியா தேர்தல் தொகுதியில் நோர்வூட் நியூவெளி இலக்கம் 205 வாக்களிப்பு நிலையமானது வாக்காளர்களுக்கு பல விதங்களிலும் அசௌகரியத்தை ஏற்படுத்திய ஒன்றாக விளங்கியுள்ளது.

நியூவெளி தோட்டத்தின் பழைய தேயிலை தொழிற்சாலையே இந்தப் பகுதியின் வாக்களிப்பு நிலையமாக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

தொழிற்சாலையின் மேற்பகுதியில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இரும்பிலான படிக்கற்களில் வாக்காளர்கள் ஏறுவதற்கு மிகவும் சிரமப்பட்டனர். வயதான வாக்காளர்கள் சிலர் இப்படிக்கற்களில் ஏற முடியாமல் திரும்பிச் சென்றதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மேலும் வாக்களிப்பு நிலையத்தின் உட்புறம் மிக குறுகியதாக இருந்ததால் தாம் பணிகளை மேற்கொள்ளச் சிரமங்களை எதிர் கொண்டதாக மேற்படி வாக்களிப்பு நிலையச் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் உட்பட பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்ட பொலிஸாரும் தெரிவித்தனர்.




# தேர்தலில் ரணில் வென்றால் நாடாளுமன்றம் கலையாதாம்

## திலீபன் எம்.பி. கூறுகின்றார்

(கே.வசந்தன்)

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெல்லும் பட்சத்தில் ஒன்றரை வருடங்களுக்கு நாடாளுமன்றம் கலைக்கப்படாது என்பதில் நம்பிக்கை உள்ளது என்று ஈ.பி.டி.பியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.

இன்று வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் தனது வாக்கைப் பதிவு செய்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"மக்கள் அதிக அளவில் வாக்கு அளிப்பதில் ஆர்வம் கொண்டு செயற்படுவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அந்தவகையில் ரணில் விக்கிரமசிங்க வெல்வதற்கான வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. ரணில் விக்கிரமசிங்க வெல்லும் பட்சத்தில் நாடாளுமன்றம் ஒன்றரை வருடங்களுக்குக் கலைக்கப்படாது." – என்றார்.



# யாழில் வாக்குச்சீட்டைக் கிழித்த இளைஞர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் வாக்களிக்க வந்த இளைஞன் ஒருவர் வாக்குச்சீட்டைக் கிழித்ததையடுத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் இன்று வாக்களிக்கச் சென்ற மேற்படி இளைஞர், தனது வாக்காளர் அட்டையைக் காண்பித்து அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்குச்சீட்டைக் கைகளில் பெற்ற பின்னர் வாக்களிக்காது அதைக் கிழித்துள்ளார்.

அதை அங்கிருந்த அதிகாரிகள் கவனித்துப் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்துப் பொலிஸார் இளைஞரைக் கைது செய்துள்ளனர்.

மேற்படி இளைஞரிடம் பொலிஸார் மற்றும் தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட முதல் கட்ட விசாரணையின்போது அவர் தேர்தலில் வாக்களிப்பது இதுவே முதல் தடவை எனத் தெரியவந்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.





# நீர்வேலியில் வீடொன்றில் தீ மூதாட்டி ஒருவர் உயிரிழப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நீர்வேலி பகுதியில் வீடொன்று தீப் பற்றியதில் வீட்டில் தனிமையில் இருந்த 65 வயதான மூதாட்டி உயிரிழந்துள்ளார்.

வீடு தீப் பற்றி எரிவதைக் கண்ணுற்ற அயலவர்கள் தீயை அணைக்க முற்பட்டதுடன், யாழ். மாநகர சபை தீயணைப்புப் படையினருக்கும் அறிவித்ததையடுத்து தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயை அணைத்தனர். எனினும், வீட்டில் இருந்த மூதாட்டி தீயில் எரிந்து உயிரிழந்துள்ளார்.

வீட்டில் இருந்த சமையல் எரிவாயு சிலிண்டர் தீப் பற்றிய நிலையில் வீட்டின் வெளியே காணப்பட்டுள்ளது.

சிலிண்டர் வெடித்து தீ விபத்து ஏற்பட்டதா? அல்லது நாசகாரச் செயலா? எனத் தெரியாத நிலையில் யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்தில் தடயவியல் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அதேவேளை, சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரும் தீவிர விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் திடீர் உயிரிழப்பு

பொலனறுவை புலஸ்திபுர விஜித ஆரம்ப பாடசாலையின் வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

பொலனறுவை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் இன்று பிற்பகல் உயிரிழந்தார் என்று புலஸ்திபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் திடீர் மரணம் தொடர்பில் பொலனறுவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஷான் டி சில்வாவின் ஆலோசனையின் பேரில் புலஸ்திபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## அவசியமானால்...

தேவைக்கேற்ப ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் பாதுகாப்புப் பிரதானிகளுக்கு இடையில் இன்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் தேவைக்கு ஏற்ப ஊரடங்குச்சட்டத்தைஅமுல்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

## ஜனாதிபதித்...

இன்று காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமான நிலையில் வாக்குச்சாவடிகளில் பொதுமக்கள் வரிசையில் நின்று ஜனநாயகக் கடமையில் ஈடுபட்டனர்.

வன்முறைகள் மற்றும் சட்டமீறல்களைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலிஸார் கடமைகளில் ஈடுபட்டதுடன் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முதலாவது முடிவை இன்று நள்ளிரவு வெளியிட முடியும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்தார்.

இந்தநிலையில், தற்போது மாவட்ட ரீதியாக அஞ்சல் மூல வாக்குகளை எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம், தற்போது கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களுக்கமைய நாடளாவிய ரீதியில் 80 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ளன.

இதன்படி, நுவரெலியா மாவட்டத்தில் 80 சதவீதமும், கொழும்பு மாவட்டத்தில் 75 சதவீதமும், கம்பஹா மாவட்டத்தில் 80 சதவீதமும், புத்தளம் மாவட்டத்தில் 78 சதவீதமும், மொனராகலை மாவட்டத்தில் 77 சதவீதமும், பதுளை மாவட்டத்தில் 73 சதவீதமும் வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், கண்டி மாவட்டத்தில் 76 சதவீதமும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 65.9 சதவீதமும், வன்னி மாவட்டத்தில் 65 சத வீதமும் வாக்குகள் பதிவாகியுள்ளன.

அதேநேரம், இரத்தினபுரி மாவட்டத்தில் 74 சதவீதமும், கேகாலை மாவட்டத்தில் 72 சதவீதமும், குருநாகல் மாவட்டத்தில் 70 சதவீத வாக்குகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 64 சதவீதமும் வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

## பிரதான...

இராஜகிரிய கொடுவேகொட சந்திரலோக அறநெறி பாடசாலையிலும், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க கொழும்பு – பஞ்சிகாவத்தை சாய்கோஜி சிறுவர் முன்பள்ளியிலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நாமல் ராஜ பக்ஷ அம்பாந்தோட்டை வீரகெட்டி டி.ஏ.ராஜபக்ஷ மகா வித்தியாலயத்திலும் தமது வாக்குகளைப் பதிவு செய்தனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இறுதிக் கட்டச் செயற்பாடு

நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் முக்கிய கட்டமான வாக்களிப்பு நடந்து முடிந்திருக்கின்றது. இனி அடுத்த - தீர்மானகரமான - அங்கமான வாக்கு எண்ணிக்கை என்ற பணி தொடரப் போகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டமை முதல் இப்போது வாக்களிப்பு முடியும் வரை பெரிய வன்முறை சம்பவங்களோ, குழப்பங்களோ இல்லை. தேர்தல் விதிமுறை மீறல் பற்றிய குற்றச்சாட்டுக்கள் மட்டுமே அதிகம் முன்வைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் பெருவெற்றியோடு அதிகாரத்துக்கு வந்த ஒரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை அடுத்த இரண்டரை வருடங்களில் மக்களே திரண்டு துரத்தி அடிக்கும் விதத்திலான கலவரங்கள், வன்முறைகள் என்று பெரும் எழுச்சி - புரட்சி - வெடித்த ஒரு தேசத்தில், அதன் பின்னர் நடைபெற்ற ஒரு தேர்தல் வாக்களிப்பு, இதுவரையில் வழமைக்கு மாறாக வன்முறைகளின்றி அமைதியாக ஒப்பேறியிருக்கின்றமை விசேடமாகக் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

ஆட்சியாளர்களை அதிகாரத்திலிருந்து கலைத்த 'அறகலய' மனநிலையிலிருந்து மக்கள் இன்னும் விடுபட்டு விடவில்லை. ஆயினும், இந்தத் தேர்தல் விடயத்தில் வாக்களிப்பு வரை அமைதி காத்து, ஒழுங்கு பேணி, சட்டத்தை மதித்து, விடயங்களை அவர்கள் நிறைவேற்றியிருக்கின்றமை மெச்சத்தக்கது.

வாக்கு எண்ணிக்கை சமயத்தில் குழப்பங்கள், வன்முறைகள், பதற்றங்கள் ஏற்படலாம் என்ற அச்ச உணர்வு - பீதி - நிலவினாலும் கூட கட்சிகளின் பிரமுகர்களும், இரண்டாம் மட்டத் தலைவர்களும், வாக்கு எண்ணிக்கை விடயங்களை அடுத்து கட்டவிழக்கூடிய நிலைமைகள், விவகாரங்களை ஒட்டி பொறுமையுடனும், சகிப்புத்தன்மையுடனும், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கு முக்கியத்துவம் கொடுத்தும் நடந்து கொள்வார்களாயின், வன்முறையும் குழப்பங்களும் ஏற்படாது என்று முழுமையாக நம்ப முடியும்.

விதிமுறைப்படி தேர்தலை நடத்தி முடிக்கும் தனது அயராத முயற்சியில் வாக்களிப்பு வரை நீதி, நியாயமாகவும் நடுநிலைத் தன்மையுடனும் செயற்பட்டு, தேர்தல் ஆணையமும் காத்திரமாப் பங்காற்றி இருக்கின்றது. எனினும் இதுவரையில் அரைக் கிணறே தாண்டப்பட்டிருக்கின்றது. பாதி தூரமே கடந்துள்ளோம். வாக்கு எண்ணிக்கைப் பணியையும் - தேர்தலின் மிக முக்கிய அம்சமான அந்தக் கடமையையும் - தேர்தல் ஆணையம் அதே நடுநிலையோடும் பொறுப்புணர்வுடனும் சிறப்பாக நடத்தி முடிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர் பிரசாரம் முடிவுற்ற வேளை தொடக்கம் பேணப்பட வேண்டிய அமைதிக் காலம் இன்று மாலை 4 மணிக்கு வாக்களிப்பு பூர்த்தியானமையை அடுத்து முடிவுக்கு வந்துவிட்டது.

அதனால் இவ்விடயங்களை ஒட்டிய அரசியல் கருத்துக்கள், விமர்சனங்கள், நிலைப்பாடுகள் பற்றிய உரைகள் போன்றவை ஊடகங்களில் சுமார் 64 மணித்தியால அமைதிக்கு பின்னர் இப்போது வெளியாகத் தொடங்கும் வேளை இது.

அப்படி வெளியிடப்படும் கருத்துக்கள் வாக்கு எண்ணிக்கை செயற்பாட்டைக் குழப்பும் சூழலை உருவாக்கி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வாக்கு எண்ணிக்கை நிலையங்கள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டாலும் அங்கும் ஆர்வக் கோளாறுகளினால் குழப்பம் நேர்ந்து விடாமல் உறுதிப்படுத்துவது முக்கியமாகும்.

தேர்தலையொட்டி நாடு முழுவதும் பரந்து கிடந்த வாக்களிப்பு நிலையங்கள் தோறும் பாதுகாப்பை செவ்வனே வழங்கி முடித்திருக்கும் பாதுகாப்பு தரப்பினருக்கு, தொடர்ந்து பாதுகாப்பு வழங்க வேண்டிய கடமைப் பிரதேசம் இப்போது சுருங்கி விட்டது. மாவட்டந்தோறும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு பாதுகாப்பளிப்பது இப்போது முதல் அவர்களுக்குப் பிரதான கடமையாக உள்ளது. அதையும் அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றி முடிப்பர் என்றும், அதனால் அமைதியான தேர்தல் ஒப்பேறும் என்றும் நம்பலாம்.

# வாக்களிக்கச் சென்ற பெண் விபத்தில் காயமடைந்தார்!

**(மஸ்கெலியா)**

வாக்களிக்க சென்ற பெண் ஓட்டோ ஒன்றுடன் மோதுண்டு கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லபட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று காலை 10.30 மணிக்கு மஸ்கெலியா நல்லதண்ணி வீதியில் புரவுன்லோ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மஸ்கெலியா குடாமஸ்கெலியா பகுதியில் இருந்து வாக்களிக்க சென்ற வேளையில் விபத்து இடம்பெற்றுள்ளது.

61 வயது உடைய ஜராங்கனி என்பவரே இவ்வாறு மோதுண்டு மஸ்கெலியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லபட்டுள்ளார் என மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.





# முள்ளியவளை பாரதி சிறுவர் அபிவிருத்தி நிலையத்துக்கு சுண்டுக்குளி மாணவிகள்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி பெண்கள் உயர்கல்லூரி மாணவத் தலைவிகள் முள்ளியவளை பாரதி சிறுவர் அபிவிருத்தி நிலையத்துக்கு விஜயம் செய்துள்ளனர்.

கல்லூரியின் மாணவத் தலைவிகளின் நலன்புரி அமைப்பு ஊடாகவே இவர்கள் முள்ளியவளையிலுள்ள பாரதி சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

இதன் போது அங்குள்ள பிள்ளைகளுடன் வித்தியாசமான விளையாட்டு மற்றும் பொழுது போக்கு நிகழ்வுகளில் கலந்து கொண்டு அவர்களை மகிழ்வித்தனர்.



# உதயனுக்கு எதிராக டக்ளஸ் ஆயிரம் கோடி ரூபா மானநஷ்டம் கோரிய வழக்கு நேற்றுத் தள்ளுபடி!

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் வாதத் திறமையால்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் 'உதயன்' பத்திரிகையிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆயிரம் கோடி ரூபா மான நஷ்டம் கோரித் தாக்கல் செய்த வழக்கை 13 வருட காலம் நீடித்த விசாரணைகளின் பின்னர் நேற்று யாழ் மாவட்ட நீதிமன்றம் தள்ளுபடி செய்திருக்கின்றது.

எதிர் மனுதாரரான 'உதயன்' பத்திரிகை சார்பில் இந்த வழக்கில் முன்னிலையாகி வாதிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் 'மானம் இல்லாதவர் மான நஷ்டம் கோர முடியாது' என்ற நிலைப்பாடு எடுத்து இந்த வழக்கைக் கையாண்ட பின்னணியில் நேற்றைய தினம் வழக்கை தள்ளுபடி செய்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

யுத்த காலத்தில் கொழும்பில் அமெரிக்கத் தூதுவராக இருந்த றொபேர்ட் ஓ பிளேக் அமெரிக்க வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பிய தகவல்கள், செய்திகளை உட்பட பல விடயங்களை இணையத்துக்குள் ஊடுருவி விக்கிலீக்ஸ் நிறுவுநர் அவற்றைத் திருடி அம்பலப்படுத்தியிருந்தார்.

ஈ.பி.டி.பி. அரச படைகளுடன் சேர்ந்து இயங்கும் துணைக்குழு என்பது உட்பட பல விடயங்கள் அதில் வெளியாகி இருந்தன.

விக்கிலீக்ஸ் தகவல்களை உதயன் பத்திரிகை வெளியிட்டமை மூலம் தமக்கு ஏற்பட்ட மானநஷ்டத்துக்கு ஆயிரம் கோடி ரூபா (வழக்குப் பிரதியில் அடைப்புக்குள் இத்தொகை ஒரு பில்லியன் ரூபா எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒரு பில்லியன் ரூபா என்றால் அது நூறு கோடி ரூபாதான்) வழங்க வேண்டும் எனத் தெரிவித்து டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அமைச்சர் தாக்கல் செய்த வழக்கில் பத்திரிகை நிறுவனம் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகி வழக்கை நடத்தியிருந்தார்.

அவர் வழக்காளியான டக்ளஸ் தேவானந்தாவை நான்கு, ஐந்து நாள்கள் சாட்சிக் கூண்டில் நிறுத்தி குறுக்கு விசாரணை செய்திருந்தார்.

உதயன் நிர்வாகி ஈ.சரவணபவனின் சாட்சியத்தையும் அவர் நெறிப்படுத்தியிருந்தார்.

விக்கி லீக்ஸில் டக்ளஸ் தேவானந்தா குறித்து வெளியான தகவல்கள் போன்ற அதே விடயங்கள் அவர் அமைச்சராக இருந்த அரசினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையில் இருப்பது பற்றிய விவரத்தை குறுக்கு விசாரணை மூலம் வெளிப்படுத்திய சட்டத்தரணி சுமந்திரன், அந்த ஆணைக்குழு மற்றும் ஆணைக்குழுவின் அச்செய்திகளை வெளிப்படுத்திய பத்திரிகைகளுக்கு எதிராக டக்ளஸ் தேவானந்தா வழக்கு எதுவும் போடாதமையையும் குறுக்கு விசாரணை மூலம் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

இந்த விடயத்தை ஒட்டி, உதயன் செய்திக்கு முன்பே அந்த விவகாரத்தில் மானம் இல்லாத ஒருவர், அதற்காக மான நஷ்டம் கோர முடியாது என சட்டத்தரணி சுமந்திரனால் வாதம் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் தீர்ப்பு 13 ஆண்டுகளின் பின்பு நேற்றைய தினம் மாவட்ட நீதிமன்றின் நீதிபதி சதீஸ்கரனால் வழங்கப்பட்டது. அவர் வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார.

இந்த வழக்கில் எதிராளிகளான பத்திரிகை நிறுவனத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கே.வி.எஸ்.கணேசராஜன், சட்டத்தரணி எம்.ஷபிஷாந்த் ஆகியோர் முன்னிலையாகினர்.

# வாக்களிப்பை அவதானிப்பதற்காக அம்பாறை அரச அதிபர் களத்தில்!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்வதற்காக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம இன்று (21) சனிக்கிழமை காலை அக்கரைப்பற்று பிரதேசத்திதுக்கு விஜயம் செய்தார்.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்ஷேக் ரீ.எம்.எம்.அன்ஸார், உதவி பிரதேச செயலாளர் அஷ்ஷேக் றாசீத் யஹ்யா, கிராம நிலதாரி எம்.உபைத் ஆகியோருடன் மாவட்ட அரச அதிபர் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிப்பு



நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

அத்தோடு, இப்பிராந்தியத்தில் வாக்களிப்பு மிகவும் சுமுகமாக நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளையும் பாதுகாப்பு தரப்போடு இணைந்து செயற்படுத்தியுள்ளார் என்று அக்கரைப்பற்று பிரதேச செயலாளர், மாவட்ட அரச அதிபருக்குத் தெளிவுபடுத்தினார்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வும் உதவிகள் வழங்கலும்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், வாராந்தம் இடம்பெறும் நிகழ்வில் நேற்று வெள்ளிக்கிழமை செல்வன் டிகுகுமார் சாகித்தியனின் தெய்வீக இன்னிசை கச்சேரி இடம் பெற்றது.

இதில் முகர்சிங் – ர.காணாமிர்த சர்மா, தபேலா – நடேசு செல்வச்சந்திரன், ஹார்மோனியம் – உ.ஹிதுதன், மிருதங்கம் – கலாவித்தகர் மகேந்திரம் பிரபா ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக இணைந்திருந்தனர்.

இதேவேளை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கின்ற மாணவி, மகாஜனக் கல்லூரியில் தரம் – 08 இல் கல்வி கற்கின்ற மாணவி, நீர்வேலி தெற்கை சேர்ந்த தரம் – 06 இல் கல்வி கற்கும் 02 மாணவர்கள் ஆகியோருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிர முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் திரு முன்னிலையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர் ஓய்வுபெற்ற ஆசிரியர் சிவநாதன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் தொண்டர்கள் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள் உறுப்பினர்கள் பக்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த 15 ஆம் முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை பகுதியில் கேப்பாப்பிலவு கிராமத்தை சேர்ந்த ஒரு குடும்பத்துக்குக் கடற்றொழில் சுயமாக மேற்கொள்வதற்காக 66 ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்தொழில் மீன்பிடி வலைகளும் வழங்கிவைக்கப்பட்டன.





# தமிழ்ச்சோலை பணியக ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபன் ஆய்வரங்கு!

தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தால் ஆண்டு தோறும் நடத்தப்படும் தியாக தீபம் திலீபன் ஆய்வரங்கு, இவ்வாண்டும் தமிழியல் பட்டகர்களின் 8 ஆவது அறிவாய்தல் அரங்காக கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் நடைபெற்றது.

தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படத்துக்கு ஈகைச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. ஈகைச் சுடரை லெப் மாதங்கி மற்றும் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட யூட் ஆகிய இரண்டு மாவீரர்களின் சகோதரர் ஏற்றி வைத்தனர்.

நிகழ்வில் மங்கல விளக்கு ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றது. நடைமுறைத் தமிழ் வழிகாட்டி அகராதி தாயகத்தில் முதலில் வெளியிடும் போது இணைந்து பணியாற்றியவரும் போராளிகளின் குடும்பப் பாதுகாப்புத் துணைப் பொறுப்பாளராகவும் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளராகவும் அறிவமுது நூல் களஞ்சியத்தை உருவாக்கியதில் ஒருவராகவும் விளங்கிய நடராசா பாஸ்கரன் முதன்மை விருந்தினராக வருகை தந்திருந்தார்.

தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் பொறுப்பாளர் ராசன், தமிழ்ச் சோலைத் தலைமைப் பணியகப் பொறுப்பாளர் நாகயாதீஸ்வரன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தமிழ்ச்சோலைக் கீதம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து குசன்வில் தமிழ்ச்சோலை மாணவர்களால் கலை நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன.

நடைமுறைத்தமிழ் வழிகாட்டி அகராதி பற்றிய உரையை தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் பரப்புரைப் பொறுப்பாளர் து. மேத்தா வழங்கியிருந்தார்.

ஆய்வு நூலையும் அகராதி நூலையும் வந்திருந்த கட்டமைப்பின் செயற்பாட்டாளர்கள், தமிழ் உணர்வாளர்கள், இனப்பற்றாளர்கள் எனப்பலரும் பெற்றுச்சென்றனர். சிறப்புரையை வணிக, வரிச்சட்ட ஆலோசகர் திருமதி சிவதேவன் சிந்துஜா வழங்கியிருந்தார்.















# சமநிலையில் முடிவடைந்துள்ள மகாஜனா - ஸ்கந்தா கிரிக்கெட்

(அஸ்ஹர் இப்றாஹிம்)



தெல்லிப்பளை மகாஜனா – சுன்னாகம், கந்தரோடை, ஸ்கந்தா வீரர்களின் கிரிக்கட் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

விறுவிறுப்பாக நடைபெற்ற 22 ஆவது துடுப்பாட்ட வீரர்களின் போர் வெற்றி தோல்வியின்றி நிறைவு பெற்றுள்ளது.

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் மகாஜனா மற்றும் ஸ்கந்தவரோதயா கல்லூரிகள் மோதிய மாபெரும் துடுப்பாட்டப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக, பார்வையாளருக்கு பெரும் விருந்தாக அமைந்து சமநிலையில் நிறைவுபெற்றது.

இரண்டாவது இனிங்சில் 185 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மகாஜனா, 6 விக்கட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்ட நேரம் நிறைவுபெற வெற்றி – தோல்வி இன்றி சமநிலையில் முடிவுற்றது 22 ஆவது வீரர்களின் போர்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தெல்லிப்பளை மகாஜனா அணித்தலைவர் களத்தடுப்பை தேர்வு செய்ய ஸ்கந்தா முதலில் துடுப்பெடுத்தாடியது. முதலாவது இனிங்சில் ஸ்கந்தா அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து முதலாவது இனிங்ஸ்'க்காகத் துடுப்பெடுத்தாடிய மகாஜனா அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

34 ஓட்டங்கள் முன்னிலையோடு இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா 9 விக்கட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களை பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்தி, இரண்டாவது இனிங்ஸ்'க்காகத் துடுப்பெடுத்தாட மகாஜனாவை அழைத்தது. மகாஜனாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்து, போட்டியை விறுவிறுப்பாக்கினர்.

எனினும் அவர்களது ஆட்டமிழப்புக்களைத் தொடர்ந்து போட்டி சீரான வேகத்தில் நகர்ந்து, பின்னர் மகாஜனா வெற்றியை நோக்கித் துடுப்பாட்டத்தை வேகமாக்கியது. எனினும் விக்கெட்டுக்களும் சீரான வேகத்தில் வீழ்த்தப்படவும் ஆட்டநேரம் நிறைவுபெறவும் பார்வையாளருக்கு நல்ல விருந்தோடு போட்டி வெற்றி – தோல்வி இன்றி சமநிலையானது.









# மன்னாரில் அமைதியான முறையில் இடம்பெற்றுள்ள வாக்களிப்புப் பணிகள்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி ஆகிய நிலையில் இன்று சனிக்கிழமை(21) காலை 7 மணி முதல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்புகள் அமைதியான முறையில் இடம்பெற்றன.

வன்னி மாவட்டம் மன்னார் தேர்தல் தொகுதியில் 98 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்புகள் இடம்பெற்றன.

காலையில் சற்று மந்த கதியில் வாக்களிப்புகள் இடம் பெற்றாலும் பின்னர் மக்கள் வருகை தந்து வாக்களிப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு குழுவினர் சென்று வாக்களிப்பை அவதானிதனர்.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் விஜயம் செய்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# ஆர்வத்துடன் வாக்களித்துள்ள மலையக பெருந்தோட்ட மக்கள்

(க.கிஷாந்தன்)

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பில் மலையகப் பெருந்தோட்ட மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

மலையகத்தை பொறுத்தவரை பெருந்தோட்ட மக்கள் உட்பட அனைவரும் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று தங்களுடைய வாக்குகளை பயன்படுத்துவதை காணக்கூடியதாக இருந்தது.

நுவரெலியா மாவட்டத்தில் 6 லட்சத்து 5 ஆயிரத்து 292 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

நுவரெலியா-மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் 347,646 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். கொத்மலை தேர்தல் தொகுதியில் 88219 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 90,990 வாக்காளர்கள் வலப்பனை தேர்தல் தொகுதியில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதோடு ஹங்குராங்கெத்த தேர்தல் தொகுதியில் 78,437 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 534 வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களித்தனர். மேலும், 52 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டன. வாக்குகளை எண்ணுவதற்காக நுவரெலியா காமினி தேசிய கல்லூரியில் 41 வாக்கு எண்ணும் நிலையங்களும், நுவரெலியா மாவட்ட செயலகத்தில் தபால் வாக்குகள் எண்ணுவதற்காக 11 வாக்கு எண்ணும் நிலையங்கள்





அமைக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களில் 8500 பேர் கடமையில் ஈடுபட்டுள்ளதோடு, பாதுகாப்புக்காக பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸாரும் 1748 பேர் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

அதேபோல் மத்திய மாகாணத்தில் கண்டி, மாத்தளை போன்ற பகுதிகளிலும் ஊவா மாகாணத்தில் பதுளை, பண்டாரவளை ஆகிய பகுதிகளிலும் வாக்களிப்பு மிகவும் நீதியாகவும் சுதந்திரமான முறையிலும் நடைபெற்றுள்ளது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன.





# மட்டு. கல்குடா முன்னாள் எம்.பி. ஜெயானந்தமூர்த்தி மீது தாக்குதல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு கல்குடா தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தியின் இணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெயானந்தமூர்த்தியின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனையில் உள்ள அவரது வீட்டுக்கு நேற்று (20) இரவு சென்ற இனந்தெரியாத நபர்கள் அவரின் வீட்டின் மீது தாக்குதல்களை முன்னெடுத்துள்ளனர். அங்கு வைக்கப்பட்டிருந்த பதாகைகளும் கிழிக்கப்பட்டுள்ளன.

இந்த தாக்குதல் நடவடிக்கையை மூவரடங்கிய குழுவினர் முன்னெடுத்தனர் என்று தாக்குதலுக்குள்ளான ஜெயானந்த மூர்த்தி தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் தாக்கு



தலுக்குள்ளானவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# மொனராகல - கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் கவிழ்ந்தது

## 17 பேர் வைத்தியசாலையில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மொனராகலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ் கும் புக்கனையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 17 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் .

இந்த விபத்துச் சம்பந்தமாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்று வாக்களித்துள்ள பிரமுகர்கள்...




கல்முனையில் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், முன்னாள் கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் ஆகியோர் வாக்களித்துள்ளனர்.




கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான், 2024 ஆண்டின் ஜனாதிபதி தேர்தலுக்கான தனது வாக்கைச் செலுத்தினார்.

பண்டாரவளை நகர விகாரையில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று, தனது வாக்கைச் செலுத்தினார்.



தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா அக்கறைப்பற்று அஸ்ஸிராஜ் மகாவித்தியாலயத்தில் வாக்களித்தார்.



தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம், 2024 ஆண்டின் ஜனாதிபதி தேர்தலுக்கான தனது வாக்கைச் செலுத்தினார்.

தலவாக்கலை வட்டகொடை – கலாபுவனம் தமிழ் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று, தனது வாக்கைச் செலுத்தினார்.



நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பீ.திசாநாயக்க, 2024 ஆண்டின் ஜனாதிபதி தேர்தலுக்கான தனது வாக்கைச் செலுத்தினார்.

ஹங்குராங்கெத்த ரிகல்லகஸ்கட – ஜெயபிம கனிஷ்ட பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று, தனது வாக்கைச் செலுத்தினார்.




கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான மஹிந்தானந்த அளுத்கமகே, 2024 ஆண்டின் ஜனாதிபதி தேர்தலுக்கான தனது வாக்கைச் செலுத்தினார்.

நாவலப்பிட்டி – குருந்துவத்த எம்.எஸ்.அளுத்கமகே தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று, தனது வாக்கைச் செலுத்தினார்.



நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இ.தொ.காவின் தவிசாளரும், நிதி செயலாளருமான மருதபாண்டி ராமேஷ்வரன், 2024 ஆண்டின் ஜனாதிபதி தேர்தலுக்கான தனது வாக்கைச் செலுத்தினார்.

தலவாக்கலை வட்டகொட – மடக்கும்புர தெற்கு தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று, தனது வாக்கைச் செலுத்தினார்.



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.குகதாசன் தமது பிறந்த ஊரான திரியாய் கிராமத்தில் வாக்களித்தார்.



நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் 2024 ஆண்டின் ஜனாதிபதி தேர்தலுக்கான தனது வாக்கைச் செலுத்தினார்.

கொத்மலை – வேவன்டன் தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று, வாக்களிப்பு நிலையத்தில் தனது முதலாவது வாக்கைக் காலை 07 மணிக்கு செலுத்தினார்.

# பா.ஜ.கவில் அதிக உறுப்பினர்களை சேர்க்க வேண்டும்: அண்ணாமலை

இந்தியாவிலேயே அதிக உறுப்பினர்கள் தமிழக பா.ஜ.கவில் இருக்க வேண்டும் எனவும் எனவே நிர்வாகிகள் கடுமையாக உழைக்க வேண்டும் என்றும் அண்ணாமலை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச அரசியல் தொடர்பான படிப்பை மேற்கொள்ள லண்டன் சென்றிருக்கும் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை, தமிழக பா.ஜ.க. நிர்வாகிகளுக்கு பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கி காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த காணொலியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் கட்சி பணி சிறப்பாக சென்று கொண்டிருக்கிறது என நம்புகிறேன். கடந்த சில நாள்களாக பா.ஜ.க நிர்வாகிகள் மிகக் கடுமையாக களத்தில் உழைத்து கொண்டிருக்கிறீர்கள். பா.ஜ.கவில் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்காக, புதியவர்களை நம்மோடு இணைப்பதற்காக, நம்



முடைய குடும்பத்தை இன்னும் வேகப்படுத்துவதற்காக உழைத்து கொண்டிருக்கிறீர்கள். இந்த நேரத்தில் உங்களிடம் நான் வைக்கக்கூடிய கோரிக்கை, நாம் இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும்.

ஏனென்றால் நமது இலக்குமிகப் பெரிய இலக்கு. தமிழகத்தில் பா.ஜ.கவின் வளர்ச்சியை அனைவரும் பார்த்து கொண்டிருக்கிறார்கள். மக்களின் அன்பு பா.ஜ.கவின் பக்கம் வர தொடங்கியிருக்கிறது. நிறையபேர் நம்முடன் இணைய வேண்டும். இந்த நேரத்தில் நம்முடைய இலக்கை மிகத் தெளிவாக வைத்திருக்க வேண்டும். ஒரு பூத்தில் குறைந்தபட்சம் 200 பேரை கட்சியில் சேர்க்க வேண்டும். இது பெரிய இலக்காக இருந்தாலும், நிச்சயம் இது நம்மால் செய்து காட்டக்கூடிய இலக்கு தான்.

ஒரு நாளில் மண்டல அளவில் 500 பேர் பா.ஜ.கவில் இணைந்தால் மட்டும்தான் குறிப்பிட்ட காலத்தில் நம் இலக்கை எட்ட முடியும். தினமும் கட்சியில் இணையும் புதியவர்களுக்கு நேரம் ஒதுக்குங்கள். இலவச செல்போன் எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுக்க வையுங்கள். அவர்களது விவரங்களை பதிவேற்றம் செய்யும் போது,அதில் பிரச்சினை இருந்தால் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். ஒவ்வொரு நாளும் நமக்கு மிக முக்கியம். இந்திய அளவில் அதிகளவிலான உறுப்பினர்கள் தமிழக பா.ஜ.கவில் இருக்க வேண்டும். தமிழக பா.ஜ.க. ஒருங்கிணைப்பு குழு தலைவர் ஹெச்.ராஜாவுக்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.”- என்று குறிப்பிட்டுள்ளார்.

# திருப்பதி லட்டு பிரசாத நெய்யில் கலப்படம்: தேவஸ்தானம் அறிக்கை அளிக்க உத்தரவு

திருப்பதி லட்டு பிரசாதத்தில் விலங்கு கொழுப்பு கலந்த விவகாரம் குறித்த விளக்க அறிக்கையை உடனடியாக வழங்க வேண்டும் என்று திருப்பதி தேவஸ்தானத்துக்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு உத்தரவிட்டுள்ளார்.

ஆந்திராவில் கடந்த ஜெகன் மோகன் ரெட்டி ஆட்சி காலத்தில் நியமனம் செய்யப்பட்ட தேவஸ்தான அறங்காவலர் குழு, மிக குறைந்த விலைக்கு, அதாவது ஒரு கிலோ நெய் 320 முதல் 411 ரூபா என்ற விலையில் 5 நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்துள்ளது. இதில் ஒரு நிறுவனமான திண்டுக் கல்லை சேர்ந்த ஏ.ஆர்.டெய்ரி ஃபுட் நிறுவனம் திருப்பதி தேவஸ்தானத்துக்கு கடந்த 5 ஆண்டுகளாக நெய் அனுப்பி வந்துள்ளது.

இதனால், லட்டு தரம் மிகவும் குறைந்து போனது. இது குறித்து பக்தர்கள் தொடர்ந்து புகார் கூறிவந்தாலும், கடந்த ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் ஆந்திராவில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு, சந்திரபாபு நாயுடுமுதல்வர் ஆனார். இதைத் தொடர்ந்து,திருப்பதி லட்டு பிரசாதத்தின் தரம் குறித்த புகாரை அவரது பார்வைக்கு தேவஸ்தான நிர்வாக அதிகாரி சியாமள் ராவ் கொண்டு சென்றுள்ளார்.

இதுகுறித்து பரிசோதனை செய்யுமாறு சந்திரபாபு நாயுடு உத்தரவிட்ட நிலையில், குஜராத்தில் உள்ள என்.டி.டி.பி. பரிசோதனை மையத்துக்கு கடந்த ஜூலை மாதத்தில் நெய் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஆய்வு முடிவில், நெய்யில் கலப்



படம் செய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. இந்த நெய்யில் மீன் எண்ணெய், மாடு மற்றும் பன்றியின் கொழுப்பு ஆகியவை கலந்துள்ளதாக பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முந்தைய ஜெகன் அரசு மீது ஆந்திரமுதல்வர் சந்திரபாபு நாயுடு பகிரங்கமாக குற்றம் சாட்டினார். இதைத் தொடர்ந்து, குஜராத், ஆந்திரா, தெலுங்கானா உட்பட பல்வேறு மாநிலங்களில் ஜெகன்மோகன் ரெட்டியின் உருவ பொம்மையை எரித்து போராட்டங்கள் நடந்து வருகின்றன.

ஆந்திராவின் பல்வேறு பொலிஸ் நிலையங்களில் இந்து அமைப்பினர் புகார்அளித்துள்ளனர். உச்ச நீதிமன்றம்,ஆந்திர உயர் நீதிமன்றத்திலும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு உள்ளன. இந்த சூழலில் முதல்வர் சந்திரபாபு நாயுடு தலைமையில் அமராவதியில் நேற்று மதியம் உயர்நிலை கூட்டம்நடைபெற்றது.

அதன் பிறகு, லட்டு பிரசாதம் தயாரிக்கும் நெய்யில் ஜெகன் ஆட்சியில் நடந்த முறைகேடுகள் குறித்து முழு விளக்க அறிக்கையை உடனடியாக வழங்க வேண்டும் என்றுதிருமலை திருப்பதி தேவஸ்தானத்துக்கு முதல்வர் சந்திரபாபு நாயுடு உத்தரவிட்டார்.

ஏழுமலையான் கோயிலின் புனிதத்தை காக்கும் விஷயத்தில், ஆகம, வைதிக, தார்மீக அமைப்புகளுடன் ஆலோசனை நடத்தி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையே, அமராவதியில் செய்தியாளர்களிடம் முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி நேற்று மாலை கருத்து தெரிவிக்கையில்,

“திருமலை லட்டு பிரசாதத்தில் பயன்படுத்தும் நெய்யில் கலப்படம் உள்ளது என சந்திரபாபு நாயுடு ஆட்சிக்கு வந்து 100 நாள்கள் ஆன பிறகு குற்றம் கூறுவது ஏன். இப்போது அவரது ஆட்சிதானே நடக்கிறது. இந்த ஆட்சியில்தான் கலப்பட விவகாரம் நடந்துள்ளது. கடந்த 100 நாள் ஆட்சியில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. அதனால், மக்களை திசை திருப்ப எங்கள் ஆட்சி மீது சந்திரபாபு நாயுடு குற்றம் சுமத்தியுள்ளார். இது ஒரு கட்டுக் கதை”- என்றார்.





# லெபனானின்இஸ்ரேலிய விமான தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தளபதி பலி

லெபனானின் தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகர் பகுதியில் இஸ்ரேலிய விமான தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் உயர்மட்ட தளபதி இப்ராஹிம் அகில் கொல்லப்பட்டுள்ளார் என ரொய்ட்டர்ஸ் மற்றும் ஏ.எப்.பி.செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

தஹ்சின் என்று அழைக்கப்படும் அகில், ஹிஸ்புல்லாவின் உயரடுக்கு ரத்வான் பிரிவைச் சேர்ந்தவர் எனவும் ஹிஸ்புல்லா அமைப்பினருடன் கூட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தபோது கொல்லப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி, பெய்ரூட்டில் நடத்திய வான்வழித் தாக்குதலில் இப்ராஹிம் அகில் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்தினார்.




எக்ஸ் தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில், ஹிஸ்புல்லாவின் உயரடுக்கு ரத்வான் பிரிவின் மற்ற உயர்மட்ட உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர் என அவர் குறிப்பிட்டார்.

1983 ஆம் ஆண்டில், பெய்ரூட்டில் உள்ள அமெரிக்க தூதரகம் மற்றும் ஒரு கடல் முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குழுவில் அவர் உறுப்பினராக இருந்தார். இந்த தாக்குதல்களில் முறையே 63 மற்றும் 307 பேர் கொல்லப்பட்டனர்.

2019 ஆம் ஆண்டில், அமெரிக்கா அகிலை ஒரு பயங்கரவாதியாக அறிவித்தது மற்றும் நீதித்துறை இணையதளம் அவர் ஹிஸ்புல்லாவின் மிக உயர்ந்த இராணுவ அமைப்பான ஜிஹாத் கவுன்சிலில் பணியாற்றுவதாகக் தெரிவித்தது.

அவர் தொடர்பான தகவல்களை அளிப்பவர்களுக்கு வெகுமதி அளிப்பதாக கடந்த ஆண்டு அமெரிக்க வெளியுறவுத்துறை அறிவித்திருந்தது.

இதனிடையே இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 09 பேர் கொல்லப்பட்டதுடன் 59 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அதில் எட்டுபேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



# அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் கருத்து கணிப்பில் ட்ரம்ப் பின்னடைவு

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் இந்திய வம்சாவளியை சேர்ந்த கமலா ஹாரிஸ், குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகின்றனர்.

கடந்த 10 ஆம் திகதி இரண்டு வேட்பாளர்களும் தொலைக்காட்சி நேரடி விவாதத்தில் பங்கேற்றனர்.

இந்த நிலையில் நேரடி விவாதம் மற்றும் அதற்கு முன்பு நடத்தப்பட்ட பல்வேறு கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியாகி உள்ளன.

குறிப்பாக நேரடி விவாதத்திற்கு பின்னர் 11 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை ரொய்ட்டர்ஸ்/இப்சோல் நடத்திய கருத்துக் கணிப்பில் கமலா ஹாரிஸுக்கு ஆதரவாக 47 சதவீத வாக்காளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் ட்ரம்ப் பின்னடைவை சந்தித்துள்ளார் என தெரியவந்துள்ளது.

பக்கங்கள் 05


கனடா முரசு

சனிக்கிழமை 21/09/2024

## டீன் ஏஜ் பெண் ஒருவரை கத்தியால் குத்திய மூவர்!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 21

ரொறன்ரோ நகரின் கிழக்கு முனையில் ஒரு பதின்ம வயதுப் பெண்ணைக் கத்தியால் குத்திக் கடுமையாகக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் 02






# தாயக உற்பத்திகளை ஊக்குவிக்கும் முயற்சி ‘தமிழர் தெருவிழா 2024’ இல் பெரு வெற்றி

**ஒன்றாரியோ, செப்ரம்பர் 21**

**‘தமிழர் தெருவிழா 2024’ இல் ‘தாயக உற்பத்திகளை ஊக்குவிப்போம்’ முயற்சி பெரும் வெற்றிப் பெற்றுள்ளதாக கனடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.**

**இது தொடர்பில் கனடியத் தமிழர் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள சமூக ஊடகப் பதிவில்,**

**‘தமிழர் தெருவிழா 2024 இல் ‘தாயக உற்பத்திகளை ஊக்குவிப்போம்’ முயற்சியின் வெற்றியைப் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மிகவும் பெருமை அடைகிறோம்.**






இந்த ஆண்டு தமிழர் தெருவிழாவில் கனடா-மட்டக்களப்பு நட்புறவுப் பண்ணையில் பயிரிடப்பட்ட எங்கள் முதல் முருங்கைப் பொடியை அறிமுகப்படுத்தி இருந்தோம். இந்த ‘சூப்பர்ஃபுட்’ இன் குறிப்பிடத்தக்க ஆரோக்கிய நன்மைகள் குறித்தும் இதன் பாவனைகள் குறித்தும் தெளிவூட்டும் வகையில் பல காட்சிப்படுத்தல்களையும் ஏற்பாடு செய்திருந்தோம். இதன்போது தாயகத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட முருங்கை தூள்களின் மாதிரிகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்துவிட்டன. இந்த செயற்திட்டத்திற்கு கிடைத்த அமோக ஆதரவு எங்கள் உறுதியை வலுப்படுத்தி உள்ளதோடு எதிர்காலத்திற்கான நம்பிக்கையையும் உருவாக்கியுள்ளது.

அதுமட்டும் அல்லாது ‘Made in Mullaitivu’ செயற்திட்டத்தில் தயாரிக்கப்பட்ட முல்லை கைத்தறி புடவைகளிற்குக் கிடைத்த வரவேற்பும் அதே அளவு ஊக்கமளிக்கிறது. போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த துணிச்சலான பெண்களால் கவனத்துடன் வடிவமைக்கப்பட்ட இந்த ஆண்டு சேகரிப்பில் பலவிதமான புடவைகள், வேஷ்டிகள், சாரங்கள் என பல கைத்தறி ஆடைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்த அனைத்து தயாரிப்புகளும் எங்கள் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டமையோடு முழுமையாக விற்கப்பட்டிருந்தன. இது எங்கள் இதயங்களுக்கு நெருக்கமான ஒரு சாதனை.

இந்த செயற்திட்டங்கள் ஒரு வணிக முயற்சி மட்டும் அல்ல. இது நிலையான வளர்ச்சிக்கான தொடக்கமாகும். இந்தத் திட்டங்களின் வெற்றி, நமது சமூகங்கத்திற்கு பொருளாதார அதிகாரம் அளிக்கும் என்பதோடு வேலைவாய்ப்புக்களை உருவாக்கி, தேவைப்படுபவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும். இது ஒரு மாற்றத்தின் ஆரம்பம் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த அர்த்தமுள்ள பயணத்தில் எங்களுடன் நின்றதற்கு நன்றி. ஒன்றாக நாம் ஒரு பிரகாசமான நாளையை உருவாக்குவோம்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.









# வீடு வீடாக விற்பனை மோசடியில் ஈடுபட்டனராம் தமிழர் உட்பட இருவர் ஒன்றாரியோவில் கைது!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 21

வீடு வீடாகச் சென்று விற்பனை மோசடியில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்களை ஒன்றாரியோ மாகாண பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் ஒரு தமிழரும் அடங்குகிறார்.

இந்த குற்றச்சாட்டில் மேலும் மூவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கைதானவர்கள் மிசிசாகா நகரை சேர்ந்த 39 வயதான ரஜீவன் தில்லை நடராஜா, ஸ்கார்பரோ நகரை சேர்ந்த 40 வயதான சஜாட் அஹமட் என அடையாளம் காணப்பட்டனர்.

பொலிஸாரால் தேடப்படும் சந்தேக நபர்கள் 23 வயதான அனாஸ் அயுப், 28 வயதான முஹமட் வாசிக் அப்ஷல், 33 வயதான முஹமட் வக்கார் அப்ஷ்ல் என அடையாளம் காணப்பட்டனர்.

இவர்கள் மூலம் மாகாணம் முழுவதும் 200க்கும் மேற்பட்டவர்கள் பாதிக் கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

2021 இல் இந்த மோசடி ஆரம்பித்தாக கூறும் ஒன்ராரியோ மாகாண பொலிஸார் தமது விசாரணைகளின் விவரங்களை வெளியிட்டனர்.



# ஒன்றாரியோ மாகாண இடைத் தேர்தலில் புரொக்ரசிவ் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி

ஒன்றாரியோ, செப்ரம்பர் 21

ஒன்றாரியோ மாகாண பே ஒவ் குயின்ட் தொகுதி மாகாண இடைத் தேர்தலில் புரொக்ரசிவ் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி பெற்றது.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் டொட் ஸ்மித் தனது பதவியில் இருந்து விலகிய நிலையில் இந்த இடைத் தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் புரொக்ரசிவ் கன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளர் டைலர் ஓல்சொப் வெற்றி பெற்றார்.

வியாழக்கிழமை நடைபெற்ற இடைத் தேர்தலில் லிபரல் கட்சியின் வேட்பாளரை அவர் வெற்றி கொண்டார்.

ஓல்சொப் 39 சதவீதமான வாக்குகளை பெற்றார்.

இந்த இடைத் தேர்தலில் லிபரல் கட்சியின் வேட்பாளர் சீன் கெல்லி 33 சதவீதமான வாக்குகளையும், புதிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் அமன்டா ரொபர்ட்சன் 23 சதவீதமான வாக்குகளையும் பெற்றனர்.

## டீன் ஏஜ் பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று சந்தேக நபர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

எக்ளிண்டன் அவென்யூ ஈஸ்ட் மற்றும் மிட்லாண்ட் அவென்யூவிற்கு அருகில் உள்ள கொர்வெட் அவென்யூ மற்றும் மாக்னோலியா அவென்யூ பகுதிகளுக்கு நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்தில் பெண் ஒருவர் பலத்த காயங்களுடன் காணப்பட்டார் எனவும், துணை மருத்துவர்கள் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கத்திக் குத்து சம்பவம் பாடசாலைக்கு அருகில் நடக்கவில்லை என்றாலும், முன்னெச்சரிக்கையாக அப்




பகுதியில் உள்ள பாடசாலைகள் சிறிது நேரம் பாதுகாப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது.



# பெண் வெளியுறவு அமைச்சர்களை அழைத்து இரண்டு நாள் சந்திப்பு கனடாவின் ஏற்பாட்டில்!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 21

பல நாடுகளைச் சேர்ந்த பெண் வெளியுறவு அமைச்சர்களை அழைத்து, நிர்வாகத்தில் பெண்களின் பங்கேற்பு மற்றும் இணையத் துன்புறுத்தல் போன்ற பிரச்சினைகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜோலி பேசுகிறார்.

தனது ஜமைக்காவின் பிரதிநிதியான கமினா ஜான்சன் ஸ்மித் மற்றும் கானா மற்றும் இந்தோனேசியாவிலிருந்து நேபாளம் மற்றும் ருமேனியா வரையிலான நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் இணைந்து ரொறன்ரோவில் இந்த இரண்டு நாள்கள் சந்திப்பை அவர் நடத்துகிறார்.

2018ஆம் ஆண்டில் மொன்றியலில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து, பல்வேறு உலகளாவிய உச்சிமாநாடுகளுடன் இணைந்ததாக இந்த முறைசாரா விவாதங்கள் நடைபெற்றன.

பொது வாழ்க்கையில் பாலின சமத்துவத்தை நாடுகள் எவ்வாறு மேம்படுத்தலாம் மற்றும் பெண்கள் பதவிக்கு வருவதைத் தடுக்கும் சிக்கல்களை எவ்வாறு சமாளிப்பது என்பன குறித்த யோசனைகளைப் பகிர்ந்து கொள்வதை நோக்கமாகக் கொண்ட சந்திப்புகள் என்று ஜோலியின் அலுவலகம் கூறுகிறது.



# வீடு விற்பனை இலாபத்தில் மோசடி; பெண் சட்டத்தரணி தேடப்படுகிறார்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 21

தோர்ன்ஹில்லைச் சேர்ந்த ஒரு பெண் சட்டத்தரணி ஒருவர் வீடு விற்பனையின் இலாபத்தை மோசடி செய்தமைக்காக பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார்.

இவருக்கு கனடா முழுவதிலும் பிடிவாறந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு வீட்டை விற்பதற்கு வசதியாக 2023 நவம்பரில் இரண்டு வீட்டு உரிமையாளர்கள் அந்தப் பெண்ணை தங்கள் சட்டத்தரணியாக நியமித்தனர் எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் வீட்டை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபத்தைப் பெறுவதற்காக அந்தப் பெண்ணை பலமுறை சந்திக்க முயன்றனர்,

46 வயதான மரியா மிகைலிட்சென்கோ, 5,000 டொலருக்கு மேல் மோசடி செய்ததற்காகவும், 5,000 டொலருக்கு மேல் திருடியமைக்காகவும், நம்பிக்கையை மீறியமைக்காகவும் தேடப்பட்டு வருகிறார்.




# சுத்தியலைக் காட்டி அச்சுறுத்தி வங்கியை கொள்ளையடித்தவர்களில் ஒருவன் சிறுவன்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 21

சுத்தியலைக் காட்டி வங்கியைக் கொள்ளையடித்தனர் என்று குற்றம் சாட்டப்பட்ட இருவரில் 15 வயது சிறுவன் ஒருவனும் உள்ளடங்குகின்றான் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்றாவது சந்தேக நபர் தலைமறைவாக உள்ளார்.

ரோயல் யோர்க் வீதி மற்றும் ரெனோல்ட் கிரசன்ட் பகுதியில் உள்ள ஒரு வங்கியில் இந்த கொள்ளைச் சம்பவம் ஓகஸ்ட் 26, 2024 திங்கள் அன்று மாலை சுமார் 5 மணியளவில் இடம்பெற்றது.

இரண்டு சந்தேகநபர்கள் வங்கிக்குள் நுழைந்து கவுண்டரில் குதித்தனர் எனவும், மூன்றாவது சந்தேக நபர் கதவருகில் காத்திருந்தார் எனவும் பொலிஸார் கூறுகின்றனர்.

சந்தேகநபர்கள் வங்கி ஊழியர்களை சுத்தியல் காட்டி மிரட்டி பணம் கேட்டனர் என்று கூறப்படுகிறது.

பணம் கொடுத்தவுடன் காத்திருந்த வாகனத்தில் அவர்கள் தப்பிச் சென்றனர்.

இவர்களில் இருவர் தற்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலில் கனடா 4ஆம் இடத்துக்குத் தள்ளப்பட்டது

உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டிய லில் இரண்டாவது இடத்திலிருந்து சறுக் கிய கனடா, இந்த ஆண்டு, நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.

US News & World Report என்னும் அமைப்பு ஆண்டுதோறும் உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலை வெளியிட்டுவருகிறது. பட்டியலில் கனடா நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

பட்டியலில் சுவிட்சர்லாந்து முதலிடத் தைப் பிடித்துள்ளது. இரண்டாவது இடத்தை ஜப்பானும், மூன்றாவது இடத்தை அமெரிக் காவும் பிடித்துள்ளன.






விடயம் என்னவென்றால், கனடா இதற்கு முன் உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இருந் தது, தற்போது நான்காவது இடத்துக்கு கீழிறங்கியுள்ளது.

கனடா இரண்டாவது இடத்திலிருந்து நான்காவது இடத்துக்கு இறங்கியதற்கு முக்கிய காரணம், அது, வர்த்தகம் செய்வ தற்கான அனுமதி வழங்குதல், பாரம்பரியம் மற்றும் தொழில் முனைவு போன்ற விட யங்களில் குறைவான புள்ளிகளைப் பெற்றதுதான்.

அதே நேரத்தில், ஆய்வுகளில் கிடைக் கும் முடிவுகளின் அடிப்படையில் மற்ற நாடுகளால் ஒரு நாடு எப்படிப்பட்டது என பார்க்கப்படுகிறது, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், சுற்றுலாவுக்கு உகந்த இடம் ஆகிய விடயங் களில் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளது கனடா.

ஆகவேதான், உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலில் முதல் ஐந்து இடங்களுக்குள் இடம் பிடிக்க கனடாவால் முடிந்துள்ளது என் பதை மறுப்பதற்கில்லை.



# நோவா வாக்ஸ் தடுப்பூசிக்கு கனடிய அரசாங்கம் அனுமதி

கனடிய அரசாங்கம் நோவா வாக்ஸ் தடுப்பூசிக்கு அனுமதி வழங்கியுள்ளது.


கொவிட் 19 தொற்றுக்காக பயன்படுத்தப்படும் நோவா வாக்ஸ் தடுப்பூசியின் இற்றைப் படுத்தப்பட்ட புதிய தடுப்பூசிக்கு கனடிய சுகாதார திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

இது புரோட்டினை அடிப்படை ஆகக் கொண்ட ஓர் தடுப்பூசி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தடுப்பூசியானது ஒமிக்ரோன் திரிபின் உப திரிவுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

பழைய கொவிட் தடுப்பூசிகளை பயன்படுத்த வேண்டாம் எனக் கனடிய சுகாதாரத் திணைக்களம் கோரியுள்ளது. அதற்கு பதிலீடாக புதிய தடுப்பூசிகளை பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த வாரம் முதல் மொடர்னா தடுப்பூசிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் குளிர்காலத்தில் புதிய கொவிட் தொற்று பரவக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் இதனால் இவ்வாறு தடுப்பூசிகள் இற்றைபடுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.



# பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பிரிட்டிஷ் கொலம்பியாவில் பெண் பலி!

பிரிட்டஷ் கொலம்பிய மாகா ணத்தில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரிட் டிஸ் கொலம்பிய பொலிஸ் விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பெண் ஒருவர் துப்பாக்கியொன்றுடன் நின்றிருந்ததாகவும் அருகமையில் சிறுமியொருவர் நின்றிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பெண்ணிடமிருந்து ஆயுதத்தை பறிக்க முயற்சிக்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது பொலிஸ் உத்தியோ கத்தர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பெண் காயமடைந்து உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.